அரக்கோணம் நகராட்சி
சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண்.60 நாள்..28.07.2020.

பொருள் : சாதாரண மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள்.31.07.2020 ெ வள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

அரக்கோணம் நகராட்சி 31.07.2020 வெள்ளிக்கிழமை கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள்கள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர்(பொ) (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுன்/2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண் :02**

அரக்கோணம் நகராட்சி பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகள் 2016 ன் படி திடக்கழிவுகளை அகற்றும் பணிகளை 195 துப்புரவு பணியாளர்களை கொண்டு வெளிகொணர்வு (Out sourcing) முறையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை கவனிக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி 27.07.2020 அன்று கோரப்பட்டு தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு கூராய்வு செய்யப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி பெற்றதை தொடர்ந்து 28.07.2020 அன்று விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகளின் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட குறைந்த சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | | மதிப்பீட்டைவிட அதிக சதவிகித ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1/ | 2/ | 3/ | 4/ | 5/ | 6/ | 7/ |
| | **பொது நிதி** | | ஒப்பந்ததாரர் பெயர் | சத விகிதம் | ஒப்பந்ததாரர் பெயர் | அதிக சத விகிதம் |
| 1. | அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகள் 2016 ன் படி தினந்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை வீடுகள் மற்றும் தெருக்களிலிருந்து சேகரித்து அதனை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து அதில் மக்கும் குப்பைகளை On site Composting மற்றும் Micro Compost Centre (MCC) தொட்டிகளில் சேர்க்கும் பணிக்கும், மக்காத குப்பைகளை நகராட்சி தெரிவிக்கும் இடத்தில் சேர்க்கும் பணிக்கும் மேலும் 36 வார்டுகளிலுள்ள தெருக்களின் பின்புறத்தில் அமைந்துள்ள சந்துகளில் உள்ள குப்பைகளை அகற்றுதல், தெருக்கள் மற்றும் முக்கிய போக்குவரத்து சாலைகளை பெருக்குதல், நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து கால்வாய்களை சுத்தம் செய்தல் மற்றும் தூர்வாருதல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல். | **ரூ.3.04 கோடி** | - | – | **Sri Vari Enterprises**<br><br>**The Walajapet Agro Engineering & Service Co-Operative Centre Limited V.V.2664,** | **4.41%**<br><br>5.57% |

மேற்படி இரு விலைவிகித ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளதால் அதில் குறைவாக Sri Vari Enterprises– **4.41%** ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

மேற்படி Sri Vari Enterprises நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதம் **4.41%** மட்டுமே கூடுதலாகவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் அவர்களின் கடித ந.க.எண் E2/5013/2020 நாள் 01.07.2020 தேதிய கடிதத்தில் துப்புரவு பணியாளர்களுக்குண்டான தினக்கூலி தொகை ரூ.**335/–** யிலிருந்து ரூ.**352/–**க்கு உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. எனவே இத்தொகைக்கு மிகாமல் ஒப்பந்ததாரரின் விலைவிகிதம் உள்ளதால் Sri Vari Enterprises நிறுவனம் வழங்கியுள்ள கூடுதல் **4.41%** மதிப்பீட்டு ஒப்பந்தபுள்ளியை ஏற்று மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் அதற்கான கூடுதல் தோராய செலவினம் ரூ.**21.00** லட்சத்திற்கு (ஓர் ஆண்டிற்கு) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்**

**(ந.க.எண்.2835/2018/எச்1)**

**பொருள் எண் :02**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் எ, பிளாக் எண் 2, நகரளவு எண் 7/1 (பழைய சர்வே எண் 10/1, 265/3)–ல் 2.94 ஏக்கர் பரப்பளவிலான இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவினை ம.வ./ந.ஊ.து.இ(வே.ம) வரன்முறைப்படுத்துதல் எண் 263(R) /2019 என எண்ணிட்டு கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் அளித்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வேலூர் மண்டலம் அவர்களின் கடிதம் ந.க.எண். 3531/18/வேம3 நாள். 26.04.2019–ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பூங்காக்களை தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்து மனுதாரர் திரு. அசோகன் மற்றும் சுதாகர் அசல் தானபத்திரத்தினை சமர்ப்பித்துள்ளார். பத்திர எண் 2048/2020 நாள். 22.07.2020. எனவே மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பூங்காக்களை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பூங்காக்களை மன்றம் ஏற்று பராமரிக்க ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.721/ 2019/எப்1)

**பொருள் எண் :03**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் எ, பிளாக் எண் 2, நகரளவு எண் 9/7 4.67 ஏக்கர் பரப்பளவிலான இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவினை ம.வ./ந.ஊ.து.இ(வே.ம) வரன்முறைப்படுத்துதல் எண் 721(R) /2019 என எண்ணிட்டு கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் அளித்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வேலூர் மண்டலம் அவர்களின் கடிதம் ந.க.எண். 5962/18/வேம3 நாள். 05.11.2019–ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் மற்றும் பூங்காக்களை தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்து மனுதாரர் திரு.S.K. வேணுகோபால் மற்றும் சுதாகர் அசல் தானபத்திரத்தினை சமர்ப்பித்துள்ளார். பத்திர எண் 1308/2020 நாள். 17.03.2020. எனவே மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பூங்காக்களை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பூங்காக்களை மன்றம் ஏற்று பராமரிக்க ஒப்புதல் அளிக்கலாம்.**

**(ந.க.எண்.1651/ 2019/எப்1)**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**